# மணநாள் வாழ்த்து!
## 14-09-2023



அன்பின்நிறை தங்கை **தமிழரசி**;
அமிழ்தின்நிறை வாழ்வைச் சூட,
பண்பின்சீர் பெருமகன் **இராஜ கோபாலனை**;
மண்ணுயிர் யாவும் வியந்து போற்ற,
தன்னிகர் இல்லா தனையன் தன்னைக்
கைத்தலம் பற்றிய நன்நாள் இன்று!



இன்றந்த நாளை நினைந்து;
இனியதாய் வாழ்த்துக் கூறல்,
அன்பின் சீர்கலனே யன்றோ!
பொன்நிகர் அன்பைச் சூடி,
பொலிவுடன் மகவைப் பெற்று,
நன்னிய வாழ்வைத் தாங்கும்,
அன்புடை இணையர் தமக்கு;
அகமகிழ்ந்து மணநாள் வாழ்த்து!



எண்ணிடும் காலம் முழுதும்,
இன்பமாய் நிறைந்து வாழ,
அன்பின்சீர் **கண்ணன்** தன்னை,
ஆழ்ந்து யான் வேண்டுவேனே!
அன்புடன்,
**கு.ப. அசோகன்** &
**A.மங்கையர்க்கரசி**
14-09-2023 (காலை 10-40)